# நெஞ்சம் நிறைந்து.....!

அணியெனக் கண்கள் சொல்லும்;
அன்பினால் தவழும் சிரிப்பு!
பிணியதும் மனதில் தோன்றா,
பிரியத்தை அடையக் கண்டேன்!
பணியென வந்த காலை,
பரிவுடன் பேசி யென்னை,
மணியென மனத்துள் முகிழ்ந்தே;
மருவின்றி இருக்கச் செய்தார்!

கனமென நினைத்த நாட்கள்,
கரைந்தன சிலவாய் என்றே!
மனமதும் ஒன்றிப் போக,
மகிழ்வுடன் வாழ்ந்தேன் யானும்!
தினமெழும் நோயின் தாக்கம்,
தீதின்றிப் போக்கிக் கொண்டேன்!
மனம்நிறை அன்பால் என்னை,
மகிழ்வுடன் அணைத்துக் கொண்டார்!

சீர்மிகு அன்பால் என்னை;
சீராளன் **முகமது நவ்பால்**,
வேர்பிடித்து, அணைத்துக் கொள்ள;
வேதனையின்றிச் சென்றன நாட்கள்!
கார்மேகம் பொழிந்தது போல்,
காலத்தினால் அன்பு செய்தார்!
சீர்பலவும் மேலும் பெற்று,
இறையருளால் எந்நாளும் வாழியவே!

- அன்புடன்,
கு.ப.அசோகன், (15-04-2018)